**Important days / dates in September:**
**September 5 : Teachers' Day (Dr. Radhakrishnan's birthday)**
**September 5 : Forgiveness day**
**September 8 :World Literacy Day.**
**September 14 : Hindi day, World first aid day**
**September 16 :World Ozone Day. Engineer's day in India**
**September 21 :Alzheimer's Day, International day of peace**
**September 25 : Social justice day**
**September 26 : Day of the Deaf.**
**September 27 : World Tourism Day**

- ஜன தன யோஜனா – ஆண்டு 15-2014 -நோக்கம் **Financial inclusion (Bank A/c)**
  - இதில் 7.5 கோடி வங்கி கணக்கு தொடங்காத குடும்பங்களை உள் கொண்டுவருவது மற்றும்,
  - **NAM-National Ayush mission** (தேசிய சுகாதார திட்டம்)
  - **Incredible** இந்தியா என்ற **Application** திட்டத்தை சுற்றுலா துறை தொடங்கியது.**(mobile App to help)**
  - 30.09.2014 அன்று கூகுளின் **"Orkut"** சமூக வலைத்தளம் மூடப்பட்டது. இந்த ஆர்க்கூட் சமூக இணையதளம் 2004 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது,
- இந்திய அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சி –யூத் அபியாஸ் 2014 (**Yudh Abhya** 2014 ) உத்தர்காண்டின் ராணிகேத் எனுமிடத்தில் 30.09.2014ல் முடிவடைந்தது.

Unique IAS Academy

- உயிர் கோள் அறிக்கை 2014 (**living Planet Repor 2014) World Wildlife Fund (WWF)** ன் மூலம் வெளியிடப்பட்டது. இவ்வருட அறிக்கையின் பொருளாக **"Species and Spaces, People and Places"**. அறிவிக்கப்பட்டது.
- 29.9.2014 அன்று மத்திய அரசு 9 சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கான அனுமதியை ரத்து செய்தது. இவற்றில் தமிழகத்தைச் சார்ந்த **"Chennai Business Park"** ம் ஒன்று.
- "கோமகாடா மாரு" (**Komagata Maru Incident**) சம்பவத்தின் நூறாம் ஆண்டு நினைவு விழா 29.9.2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது. 1914 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாள் இந்தியாவின் பஞ்சாப்பை சார்ந்த 340 சீக்கியர்கள், 24 முஸ்லீம்கள் மற்றும் 12 இந்துக்கள் பயணம் செய்த **"Komagata Maru"** என்ற ஜப்பானிய கப்பல் கொல்கத்தாவை வந்தடைந்தது. ஆந்த கப்பலில் பயணம் செய்த இந்தியரை போராட்டக்காரர்கள் என சந்தேகித்த ஆங்கிலேய அரசு துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 19 பயணிகள் கொல்லப்பட்டார்கள். பயணம் செய்தவர்களில் சீக்கியரான பாபா குர்சித் சிங் தப்பினார். இந்நிகழ்ச்சியே கோமகடா மாரு சம்பவம் எனப்படுகிறது.
- உலக இருதய தினம்-செப்டம்பர் 29. இந்த வருட இதய தின அனுசரிப்பின் பொருள் "இதயத்தின் விருப்பங்கள் கடினமான விருப்பங்களல்ல" **(Heart Choices Not Hard Choices)**
- உலக சுற்றுலா தினம்- செப்டம்பர் 27

Unique IAS Academy

- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் அவையினால் நடத்தப்பட்ட ஆய்வில் 2100 ஆம் ஆண்டிற்குள்ளாக உலகின் தற்போதைய மக்கள் தொகையான 7.2 பில்லியன் என்பது 11 பில்லியன் அளவிற்கு வளர்ச்சியடையும் என கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தி திரைப்படமான "Liar's Dice" 2014 ஆம் ஆண்டிற்கான ஆஸ்கார் விருதுகளுக்கான (சிறந்த வெளிநாட்டு மொழி திரைப்படம்) போட்டியில் இந்தியாவின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படத்தின் இயக்குனர் கீது மோகன்தாஸ்.
- **UNFCCC** என்பதன் விரிவாக்கம்- **United Nations Framework Convention on Climate Change** ஐ.நாவின் காலநிலை மாற்றத்திற்கான கூடுகை 2014 செப்டம்பர் 23 ஆம் நாள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்றது.
- 25.9.2014 அன்று இந்திய பிரதமர் மோடி அவர்கள் " இந்தியாவில் உருவாக்குவோம்" **(Make In India Campaign)** என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதற்காக சிங்கத்தின் படத்துடனான லோகோ உருவாக்கப்பட்டுள்ளது. ஊலக வங்கியில் எளிதாக தொழில் துவங்க இயலும் நாடுகளின் பட்டியலில் **(Ease of doing Business index)** இந்தியா மிகவும் பின்தங்கி 134 ஆவது இடத்தில் உள்ளது. **FDI (Foreign Direct Investment)** என்பதற்கு முதலில் இந்தியாவை முன்னேற்றுவோம் **(First Develop India)** என்பதாக புதிய விரிவாக்கத்தை பிரதமர் அறிவித்துள்ளார்.
- இந்தியாவில் தற்போது ஆட்டோமொபைல் துறையில் 100% அந்நிய முதலீடும், இராணுவத் துறையில் 49% அந்நிய முதலீடும் நடைமுறையில் உள்ளன.

Unique IAS Academy

- செப்டம்பர் 25 ஆம் நாளை "அந்தியோதயா திவாஸ்" என அனுசரிக்க மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்தினம் பண்டிட் தீனதயாள் உபாத்யாய அவர்களின் 98 வது பிறந்த தினத்தின் நினைவாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- சிறுவர்களுக்கு வங்கி கணக்கு- **SBI,ICICI** வங்கிகள் முதல் முறையாக 10 வயதிற்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு தனியாக வங்கி கணக்கு துவங்க அனுமதித்துள்ளது.
- கிரிக்கெட் விளையாட்டிற்கான உயரிய விருதான "பிராட்மேன் விருது-2014" இந்த ஆண்டு சச்சின் டெண்டுல்கர் மற்றும் ஸ்டீவ் வாக் ஆகியோருக்கு வழங்கப்பட உள்ளன.
- சார்க் நாடுகளுக்கான மூன்றாவது கலாச்சார அமைச்சர்களின் கூடுகை 24,25-9-2014 தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்றது. கூடுகையின் போது "டில்லி தீர்மானம்" ஒன்று வெளியிடப்பட்டது. இதன்படி 2016-17 ஆண்டுகளை சார்க் நாடுகளின் கலாச்சார ஆண்டாக அனுசரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2015-2016 ஆண்டுகளுக்கான சார்க் நாடுகளின் கலாச்சார தலைநகராக "பாமியான்" விளங்கும்.
- **Right Livelihood Award** 2014: " மாற்று நோபல் பரிசு" **(alternate nobel prize)** என அழைக்கப்படும். இவ்விருது இந்த ஆண்டு எட்வர்ட் ஸ்நோடன் **(wiki leaks)** மற்றும் ஆலன் ருஸ்பிர்ட்ஜெர் (தி காட்டியன் பத்திரிக்கை) ஆகியோருக்கு வழங்கப்படுகிறது
- தீன் தயாள் உபாத்யா கிராமீன் கவுசல்யா யோஜனா-மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்களால் 25-09-2014 அன்று துவக்கி



Unique IAS Academy

வைக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டிற்குள்ளாக 10 மில்லியன் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் திறன் மேம்பாட்டின் மூலம் ஊரக பகுதிகளில் காணப்படும் வறுமையை ஒழிப்பதாகும். இத்திட்டம் முன்னதாக கடந்த 2011 ஆம் ஆண்டு "அஜ்வீகா திறன் மேம்பாட்டு திட்டம்" **(Aajeevika skills Development Programme)** என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

- இந்திய அளவில் அறிவியல் அறிஞர்களுக்கு வழங்கப்படும் சாந்தி ஸ்வரூப் பட்நகர் விருது **(Shanthi Swarup Bhatnagar Award 2014) CSIR (Council for Scientific & Industrial Research)** னால் வழங்கப்படுகிறது.
- சமீபத்தில் பாகிஸ்தான் இராணுவத்தால் சோதனை செய்யப்பட்ட குறுந்தொலைவு அணு ஆயுத ஏவுகணையின் பெயர்- காட்ஃ. **(Mount Ontake)**
- இந்தியா உணவு பூங்கா-24-09-2014 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் கர்நாடகாவின் தும்கூர் என்ற இடத்தில் துவக்கி வைக்கப்பட்டது.
- ஆப்கானிஸ்தான் நாட்டின் புதிய அதிபர் -அஸ்ரப் கானி அஹ்மத்சாய்
- ஐ.நா சபையில் மோடி: ஐ.நா சபையின் 69 ஆவது கூடுகையில் உரையாற்றிய நரேந்திரமோடி - இந்தி மொழியில் உரையாற்றிய இரண்டாவது பிரதமர் என்ற பெருமையைப் பெறுகிறார். ஆனால் இந்தியர் என்ற முறையில் மூன்றாவது (வெளியுறவுத்துறை அமைச்சராக நரசிம்மராவ் இந்தியில் உரையாற்றியுள்ளார்)
- சாதனை படைத்த மங்கள்யான் - 24-09-2014 அன்று மங்கள்யான் விண்கலம் செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக இணைந்தது.

Unique IAS Academy

முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்தை சென்றடைந்த உலகின் முதல் விண்கலம் என்ற பெருமையை மங்கள்யான் பெற்றுள்ளது. மேலும் செவ்வாய் கிரகத்திற்கு விண்கலம் அனுப்பிய நாடுகளில் நான்காவது நாடாக இந்தியாவும் இணைந்துள்ளது. முதல் மூன்று இடங்களை அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா ஆகிய நாடுகள் பெற்றுள்ளன. இதுவரை உலகளவில் 51 விண்கலங்கள் பல நாடுகளால் செலுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 21 மட்டுமே வெற்றிகரமாக சுற்றுவட்டப்பாதையை சென்றடைந்துள்ளன.

- மங்கள்யானில் உள்ள கருவிகள் (தகவல்கள் , தினமணி நாளிதழ்)
- லிமான் ஆல்பா போட்டோமீட்டர்: செவ்வாய் கிரகத்தில் நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான கருவி செவ்வாய் கிரக வளிமண்டலத்தின் மேல் அடுக்கில் கதிர்வீச்சில் டுடீரியம் ஹைட்ரஜன் அளவை இந்தக்கருவி கணக்கிடும். இந்த அளவைக் கணக்கிடுவதன் மூலம் செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் எவ்வாறு இல்லாமல் போனது அல்லது எந்த வடிவத்தில் உள்ளது என்பதை அறியலாம்.
- மீத்தேன் சென்சார் ஃபார் மார்ஸ்: செவ்வாய் கிரக வளிமண்டலத்தில் மீத்தேன் வாயு உள்ளதா, அது எதிலிருந்து உருவானது என்பதைக் கண்டறிவதற்கான கருவி. நூறு கோடி துகள்களில் ஒரு துகளை அளவிடும் துல்லியமான கருவிகள் இதில் உண்டு. செவ்வாய் கிரகத்திலிருந்து பிரதிபலிக்கும் சூரிய கதிர்வீச்சைக் கொண்டு இது தகவல்களைச் சேகரிக்கும்.

Unique IAS Academy

- மார்ஸ் எக்சாஸ்பெரிக் நியூட்ரல் கம்போசிஷன் அனலைசர்: செவ்வாய் கிரக வளிமண்டல மேல் அடுக்கை சுமார் 400 கிலோமீட்டர் உயரத்திலிருந்து இந்தக் கருவி ஆராயும்.
- மார்ஸ் கலர் கேமரா: செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பு எவ்வாறு உள்ளது. வானிலை எப்படி உள்ளது என்பதை இந்தக் கேமராவில் படம்பிடிக்கலாம். அதோடு, செவ்வாயின் துணைக்கோள்களான போபோஸ், டெய்மோஸ் ஆகியவற்றை ஆய்வு செய்யவும் இந்தக் கேமராவை பயன்படுத்தலாம்.

- <u>மங்கள்யான் மற்றும் அமெரிக்காவின் மேவன் வேறுபாடுகள்</u>
- அமெரிக்காவின் மேவன் விண்கலத்துடன் ஒப்பிடும்போது மங்கள்யான் விண்கலம் வேறுபட்டது. இரண்டும் வெவ்வேறு நோக்கங்களுக்காக செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.
- மேவன் விண்கலம் செவ்வாய் கிரகத்தின் வளிமண்டல மேற்பரப்பை மட்டுமே ஆய்வு செய்யும் நோக்கத்தில் அனுப்பபட்டுள்ளது.
- இந்தியா முதல்முறையாக அனுப்பியுள்ள மங்கள்யான் விண்கலம், செவ்வாய் கிரகத்தின் தரைப்பகுதி, வளிமண்டலம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யும்.
- <u>இந்தியாவின் மங்கள்யான்</u>
- ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து 2013, நவம்பர் 5-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது.
- திட்ட மதிப்பீடு ரூ.450 கோடி

Unique IAS Academy

- செவ்வாய் கிரகத்தில் நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு, கனிம வளம், வளிமண்டலத்தில் மீத்தேன் வாயு போன்றவற்றை ஆய்வுக்காலம் குறைந்தபட்சம் 6 மாதங்கள்
- 66 கோடி கிலோமீட்டர் பயணம்
- 18 மாதங்களில் உருவாக்கப்பட்டது.
- விண்கலத்தின் எடை 1,337 கிலோ
- விண்கலத்தில் உள்ள அறிவியல் கருவிகளின் எடை 15 கிலோ செவ்வாய் கிரக சுற்றுப்பாதையை 2014, செப்டம்பர் 24 ல் அடைந்தது.
- அமெரிக்காவின் மேவன்
- ஃப்ளோரிடாவின் கேப் கேன்னிவரல் விமானப்படை ஏவுதளத்தில் இருந்து 2013, நவம்பர் 18 ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது.
- ரூ.4,083 கோடி
- செவ்வாய் கிரகத்தின் வளிமண்டல மேல் அடுக்கை ஆய்வு செய்வதற்காக அனுப்பபட்டுள்ளது.
- முதன்மையான ஆய்வுக் காலம் ஓர் ஆண். பிறகு. 29 மாதங்களுக்கும் மிக அதிக உயரத்திலான சுற்றுப்பாதையில் 6 ஆண்டுகள்
- 71 கோடி கிலோமீட்டர் பயணம்
- 5 ஆண்டுகளில் உருவாக்கப்பட்டது.
- 2,454 கிலோ
- 65 கிலோ

Unique IAS Academy

- 2014, செப்டம்பர் 21 ஆம் தேதி சுற்றுப்பாதையை அடைந்தது வரையும் இயங்கும்.
- மங்கள்யான் கடந்து வந்த பாதை
- 05-11-2013 அன்று ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து **PSLV-C25** ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.
- 01-12-2013 அன்று புவி ஈர்ப்பு விசையிலிருந்து விலகி புவியிலிருந்து 66.7 கி.மீ கோடி தொலைவிலிருக்கும் செவ்வாய் கிரகத்தை நோக்கி பயணித்தது.
- 22-09-2014 **Liquid Apogee Motor** ஐ வெற்றிகரமாக சோதனை செய்தது.
- சரஸ்வதி சம்மன் விருது 2013 : புகழ்பெற்ற இந்தி மொழி நாவலாசிரியர் கோவிந்த் மிஷ்ராவுக்கு வழங்கப்பட்டது. இவர் எழுதிய "தூல் பவுதான்" **(Dhool paudhon)** என்ற நாவலுக்காக இவ்விருது வழங்கப்பட்டது.
- சரஸ்வதி சம்மன் விருது பற்றி : K.K. பிர்லா அறக்கட்டளையின் மூலமாக 1991 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இவ்விருது, இந்திய அரசியலமைப்பின் 8 ஆவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள மொழிகளில் சிறந்த நாவல் அல்லது கவிதைக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது தவிர K.K.பிர்லா அறக்கட்டளையின் மூலம் இந்தி மொழிக்கு மட்டும் வியாஸ் சம்மன் இந்தி மற்றும் இராஜஸ்தானி மொழிகளுக்கு பிகாரி புரஸ்கார் ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.
- அத்லெட்டிக் மற்றும் கோல்.ஃப் விளையாட்டுகளுக்கான தேசிய கல்வி நிறுவனம்

Unique IAS Academy

- மத்திய விளையாட்டு அமைச்சகத்தால் திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் கூட்டமைப்பில் உருவாகும் நாட்டின் முதல் விளையாட்டுகளுக்கான கல்வி நிறுவனம் என்ற பெருமையை இந்நிறுவனம் பெற்றுள்ளது.
- 2016ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நாடு பிரேசில் (ரியோ நகரம்)
- உலக பசுமை கட்டிடங்களுக்கான வாரம்- செப்டம்பர் 22-27 வரை.
- ஃபிஜி நாட்டின் புதிய பிரதமர்- வோரெக் பெய்னிமராமா பிஜி நாட்டில் இந்த தேர்தலில் தான் முதல் முறையாக இந்திய வம்சாவளியினருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- சமீபத்தில் தனது நாட்டின் தேசிய கொடியை மாற்றுவதற்காக பொது வாக்கெடுப்பு நடத்த திட்டமிட்டுள்ள நாடு- நியூசிலாந்து.
- ஆப்பரேசன் மேக ராத் (**Operation Negh Rahat**)- வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மீட்பு பணிகளுக்காக இந்திய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை.
- உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கான பொது சுகாதார விருது (**South East Asia Regional Award for Excellence in Public Health**) வங்காள தேசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விருது அந்நாட்டின் தைமூர் லெஸ்தி என்ற இடத்தில் நடைமுறைபடுத்தியதற்காக வழங்கப்பட்டுள்ளது.
- 17-09-2014 அன்று இந்தியா வருகை புரிந்த சீன அதிபர் -ஜி ஜிங்பிங் (**Xi Jingping**)

Unique IAS Academy

- சமீபத்தில் சீன இராணுவம் கூடாரம் அமைத்து ஆக்கிரமிக்க முயற்சி செய்த இந்திய பகுதி – லடாக் -ன் சூமார் பகுதி.
- "நிர்பயா மையங்கள்" உத்திர பிரதேச மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பெண்களுக்கெதிரான அநீதிகளை விசாரிக்க நிர்பயா மையங்களை அம்மாநில அரசு அமைத்துள்ளது.
- நியூசிலாந்து நாட்டின் புதிய பிரதமராக ஜான் கீ மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கபட்டுள்ளார்.
- 800 ஆண்டுகளுக்கு பின்னர் நாளந்தா பல்கலைக்கழகம் மறுபடியும் செயல்படத்துவங்கியுள்ளது. நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி.427 ஆம் ஆண்டில் குப்த மன்னர் சக்ராதித்யா வின் ஆட்சி காலத்தில் துவங்கப்பட்டது. கி.பி 1193 ஆம் ஆண்டு குத்புதீன் ஐபக்கின் படை தளபதி பக்தியார் கில்ஜி யினால் இப்பல்கலைக்கழகம் அழிக்கப்பட்டது.
- இங்கிலாந்து நாட்டிலிருந்து பிரிந்து ஸ்காட்லாந்து தனிநாடாக மாறுவதற்காக 19-09-2014 அன்று நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் பெரும்பான்மையான(55%) ஸ்காட்லாந்து மக்கள் இங்கிலாந்துடன் இணைந்திருக்கவே விருப்பம் தெரிவித்தனர்.
- சமீபத்தில் செய்திகளில் வந்த **Hockey Village India** என்ற அமைப்பு ஆண்ட்ரியா தம்ஷிரின் என்ற ஜெர்மானியரால், கிராமப்புற குழந்தைகளிடையே ஹாக்கி விளையாட்டைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சியளிக்க 2010 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலத்தின் கார்க் ஹிம்மத் சிங் என்ற இடத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

Unique IAS Academy

- அமெரிக்க-இந்திய ஃபார்ட்னர்ஷிப் தினம் **(US-India Partnership Day)** செப்டம்பர் 30, இந்திய பிரதமர் மோடி அவர்களின் வருகையை முன்னிட்டு செப்டம்பர் 30 ஆம் நாள் அமெரிக்க-இந்திய ஃபார்ட்னர்ஷிப் தினமாக கொண்டாட அந்நாடு முடிவு செய்துள்ளது.
- தென்கொரியாவின் இன்சென் நகரில் நடைபெறவுள்ள 17 வது ஆசிய விளையாட்டுகளின் துவக்க விழாவில் இந்திய தேசியகொடி ஏந்த இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் சர்தார் சிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார். **Asian Games** நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. கடைசியாக **Asian Games** க்கு 2010 ஆம் ஆண்டு சீனாவின் ஹான்க்சோ நகரில் நடைபெற்றது.
- தேவதை மானியம் **(Angel Fund)** : புதிதாக தொழில் துவங்கும் முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிக்க அஸ்ஸாம் மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- புகழ்பெற்ற மாண்டலின் இசைக்கலைஞர் ஸ்ரீநிவாஸ் 19-09-2014 அன்று காலமானார்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளரான இந்தியாவின் முதல் திருநங்கை (தமிழ்நாட்டைச் சார்ந்தவர்) – பத்மினி பிரகாஸ்.
- விண்டேஜ் டகோட்டா போர் விமானம் **(Vintage Dakota Aircraft)** – பங்காளதேசம் தனிநாடாக பிரிய காரணமான 1971 ஆம் ஆண்டு போரின் போது முக்கிய பங்காற்றிய இப்போர் விமானம் இது வரை இந்திய

Unique IAS Academy

விமானப்படையால் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது இந்தியா இப்போர்விமானத்தை பங்காளதேச விமானப்படைக்கு பரிசாக வழங்கியுள்ளது.

- "மைல்களுக்கான பயணத்தில் ஒரு இஞ்ச்" என சமீபத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் உருவகம் செய்யப்பட்ட அயல்நாட்டு உறவு - இந்திய – சீன உறவு
- குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வியட்நாம் நாட்டிற்கு அரசுமுறை பயணமாக சென்றுள்ளார்.
- தேசிய நீதித்துறை பணி நியமன ஆணையம் சட்டம் 2014 (**National Judicial Appointments Commission (NJAC) Bill 2014**) ஐ முதன்முதலாக அமுல்படுத்திய இந்திய மாநிலம் - இராஜஸ்தான்
- தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவியாக லலிதா குமாரமங்கலம் நியமிக்கபட்டுள்ளார். தேசிய பெண்கள் ஆணையம் 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- **"And then One Day : A Memoir"** என்ற புத்தகத்தின் ஆசிரியர் - பாலிவுட் நடிகர் நசிருதீன் ஷா
- நாட்டிலேயே முதன்முறையாக மின் காவல் நிலையங்கள் **(e-Police stations)** புது தில்லியில் துவங்கப்பட்டுள்ளன. இக்காவல் நிலையங்கள் முக்கியமாக வாகன திருட்டு போன்ற புகார்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன.
- சர்வதேச ஓசோன் படல பாதுகாப்பு தினம் - செப்டம்பர் 16
- "தேசிய ஆயுஸ் திட்டத்திற்கு" **National AYUSH Mission)** மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. யுலுருளுர் என்பது ஆயுர்வேதம்,

Unique IAS Academy

யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளை குறிக்கும்.

- நாடெங்கும் செப்டம்பர் 14 ஆம் நாள் "இந்தி திவாஸ்" ஆக அனுசரிக்கப்பட்டது.
- ஸ்வாச் பாரத் திட்டம் **(Swachh Bharat Campaign)** 15-08-2014 அன்று பிதரமர் மோடி அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி வரும் 2019 (மகாத்மா காந்தியின் 150 வது பிறந்த தினம்) க்குள் இந்தியாவை தூய்மையான இந்தியாவாக மாற்ற வேண்டும்.
- 11-09-2014 அன்று எல்லை பாதுகாப்பு படையுடன் (BSF) ஒருங்கிணைக்கப்பட்ட பாஸ்கராச்சார்யா வான்வெளி மற்றும் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் **(Bhaskaracharya Insitute for space Applications and Geo Informatics (BISAG))** குஜராத் மாநிலத்தில் உள்ளது
- சமீபத்தில் செய்திகளில் வந்த புதிதாய் கண்டெடுக்கப்பட்ட நீர்வாழ் டைனோசர்களின் எலும்புக் கூடுகள் எந்த நாட்டில் கண்டெடுக்கப்பட்டன- மொராக்கோ.
- உக்ரைன் மற்றும் ரஷிய புரட்சி படைகள் செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பெயர்-மின்ஸ்க் ஒப்பந்தம் **(Minsk agreement)**
- **ATM Card** இல்லாமல் பணம் எடுக்கும் மற்றும் செலுத்தும் முறையை முதல்முதலில் அறிமுகப்படுத்திய வங்கி நிறுவனம் - **ICICI (Industrial Credit and Investment Corporation of India)**

Unique IAS Academy

- கடந்த 09-09-2014 அன்று வெளியிடப்பட்ட 6 வது பொருளாதார சென்ஸஸ்படி இந்தியாவில் அதிக அளவில் கூலித்தொழிலாளர்கள் நிறைந்துள்ள மாநிலம் - அருணாச்சல பிரதேசம்.
- சமீபத்தில் திருநங்கைகளை மூன்றாம் பால் என அங்கீகாரம் அளித்த மாநிலம் - பீகார்.
- புதிதாய் உலக வங்கியின் செயல் இயக்குநராக நியமிக்கப்பட்ட இந்தியர் - சுபாஸ் சந்திர கார்க் 11-09-2014 அன்று இந்தியா அக்னி-1 என்ற அணு ஆயுதம் தாங்கும் ஏவுகணையான அக்னி 1 ஐ வெற்றிகரமாக சோதித்தது. இது 700 கி.மீ தூரம் சென்று தாக்கும் திறனுடையது. முதல் முறையாக 1989 ஆம் ஆண்டு சோதனை செய்யப்பட்டது.
- பிரபல ஸ்னூக்கர் விளையாட்டு வீரர் பங்கஜ்அத்வானி ஸ்னூக்கர் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.
- இந்தியா ஜெர்மனி திட கழிவு மேலாண்மை ஒப்பந்தம் 2014- இந்திய பிரதமர் நரேந்திரமோடி மற்றும் ஜெர்மனியின் வெளியுறவு அமைச்சர் பிராங் வால்டர் இடையே செய்துகொள்ளப்பட்டது.
- டாக்டர் ஹனோரிஸ் காஸா விருது 2014 (**Doctor Honoris Causa)**
- இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம் (**Indian Agricultural Research Institute (IARI))** மற்றும் தேசிய விவசாய அறிவியல் கழகம் (**National Academy of Agricultural Sciences (NAAS))** மூலம் இவ்விருது வழங்கப்படுகிறது.

Unique IAS Academy

- இந்த வருடம் இவ்விருது உலக உணவு மற்றும் விவசாய நிறுவன இயக்குநர் ஜோஸ் கிரேசியானோ டா சில்வா விற்கு வழங்கப்பட்டது. ஜோஸ் கிரேசியானோ டா சில்வா பிரேசில் நாட்டின் உணவு பாதுகாப்பு திட்டமான **Zero Hunger Programme** என்ற திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி பங்காற்றியதற்காக இவ்விருது வழங்கப்பட்டது.
- நிகர்நிலை பல்கலைக் கழகங்களின் தரம் ஆராய ஜனவரி 2014ல் உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் **H**-தேவராஜ்.
- இதற்கு முன்னர் 2009ம் ஆண்டு தாண்டன் **(Tandon)** குழு இதே நோக்கத்திற்கு அமைக்கப்பட்டு 44 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களை தகுதியற்றவையாக அறிக்கை செய்திருந்தது.
- 15-08-2014 அன்று புவிக்கு மேலே 17200 மீட்டர் உயரத்தில் பறந்து "ஸ்டிராடோஸ்பியரை அடைந்த முதல் இந்தியர்" என்ற பெருமையை **ISRO** விஞ்ஞானி **TN** சுரேஷ் அடைந்துள்ளார்.
- ஹிமாலயா திவாஸ் - செப்டம்பர் 9. உத்தரகாண்ட் மாநில அரசு செப்டம்பர் 9 ஆம் நாளை ஹிமாலயா திவாஸ் என அனுசரிக்க ஆணையிட்டுள்ளது. இமாலய மலைப்பகுதியின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- எலெக்ட்ரோடியாலிஸிஸ் -சூரிய மின் சக்தி மூலம் கடல்நீரை குடிநீராக்கும் தொழில்நுட்பம். அமெரிக்காவின் **Massachusetts Institute of Technology (MIT)** உருவாக்கிய இத்தொழில்நுட்பம் செப்டம்பர் மாதத்தில் இந்தியாவில் அமலபடுத்தப்படவுள்ளது.

Unique IAS Academy

- சாக்ஸார் பாரத் விருதுகள் (**Saakshar Bharat Awards**) – வயது வந்தோர் கல்வியில் சிறப்பான பங்காற்றிய மாநில, மாவட்ட, கிராம பஞ்சாயத்து அமைப்புகளுக்கு மத்திய அரசினால் வழங்கப்படும் விருது. கடந்த 8-09-2019 முதல் ஒவ்வொரு வருடமும் சர்வதேச எழுத்தறிவிப்பு தின நிகழ்வில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.
- உயரியற் பல்வகைமைக்கான சர்வதேச விருதான 'மிடோரி பரிசு 2014' (**MIDORI Prize in Biodiversity**) இந்திய வம்சவழி விஞ்ஞானியாக கமல் பவா (**Kamal Bawa**) விற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விஞ்ஞானி இமாலாய மலைப்பகுதிகளில் காலநிலை மாற்றம் சார்ந்த ஆராய்ச்சியில் சிறப்பான பங்காற்றியுள்ளார்.
- உலகிலேயே தொடர்ந்து மிக அதிக நாள் செயலாற்றிவரும் இரண்டாவது அணு உலை என்ற பெருமையை ராஜஸ்தான் அணு மின்நிலையத்தின் **Unit** 5 பெற்றுள்ளது. இந்த அணு உலையானது தொடர்ந்து 765 நாட்கள் செயலாற்றி இப்பெருமையை அடைந்துள்ளது.
- முதலிடத்தை கனடா நாட்டு 'பிக்கெரிங் அணு உலை' 894 நாட்கள் தொடர்ந்து செயலாற்றி பெற்றுள்ளது.
- ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அப்பாட் செப்டம்பர் 4,5 தேதிகளில் இந்தியாவிற்கு வருகை தந்தார். இவ்வருகையின் போது இந்தியா-ஆஸ்திரேலியா இடையே அணு ஆற்றல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2015 ஆம் ஆண்டில்

Unique IAS Academy

இருநாடுகளுக்கிடையேயான கடல் படைகளின் கூட்டுப்பயிற்சியும் திட்டமிடப்பட்டுள்ளது.

- ஆஸ்திரேலியா தவிர சீனா, அமெரிக்கா, ரஷியா, பிரான்சு, இங்கிலாந்து, கனடா, கஸகஸ்தான், அர்ஜென்டினா, நமீபியா, மங்கோலியாநாடுகளுடனும் இந்தியா அணு ஆற்றல் மற்றும் கழிவு மேலாண்மை தொடர்பான ஒப்பந்தங்களை செய்துள்ளது.
- இந்தியாவின் முதல் பவள தோட்டம் (**Coral Garden**) **–** குஜராத்தின் மிதாப்பூர் கடற்கரை பகுதியில் இந்திய வனவிலங்குகள் அமைப்பு மற்றும் டாடா கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படவுள்ளது.
- சீன அரசின் "சீன புத்தக விருது" இந்திய பேராசிரியர் பிரியதர்சி முகர்ஜிக்கு வழங்கப்பட்டது.
- நேட்டோ (NATO) அமைப்பின் கூடுகை 2014 இங்கிலாந்தின் வேல்ஸ் நகரில் நடைபெற்றது. இக்கூடுகையில் "வேல்ஸ் பிரகடனம்" வெளியிடப்பட்டது.
- நேட்டோ அமைப்பு பல்வேறு நாடுகளுக்கிடையேயான இராணுவ கூட்டமைப்பு ஆகும். இவ்வமைப்பு 1949 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் மூலம் உருவானது. நேட்டோவின் முந்தைய கூடுகை 2012 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்றது. அடுத்த கூடுகை 2016 ஆம் ஆண்டு போலந்தின் வார்சா நகரில் நடைபெறவுள்ளது.

Unique IAS Academy

- டென்மார்க்கின் கோபென்ஹேகன் நகரில் நடைபெற்ற **IWF** உலக பழுதூக்கும் போட்டியில் இந்திய இராணுவத்தில் லெப்டினன்ட் கர்னலாக பணியாற்றும் சுதாகர் ஜெயந்த் தங்கம் வென்றுள்ளார்.
- **INS** சுமித்திரா - இந்தியாவின் மிகப்பெரிய கடலோர ரோந்து கப்பலான **INS** சுமித்திரா 04-09-2014 அன்று கடற்படைத் தளபதி அட்மிரல் **RK** தவான் அவர்களால் சென்னை துறைமுகத்தில் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இக்கப்பல் கிழக்கு கடலோர ரோந்து பணியில் ஈடுபடுத்தப்படும்.
- இந்திய – ஜப்பானிய ஆண்டு கூடுகை 2014 – ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டார். இந்தியாவில் உள்கட்டமைப்பு பணிகளுக்காக 500 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கனடா வழங்க ஜப்பான் ஒப்புகொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாவது உலக பேரிடர் மாநாடு 2015 ஆம் ஆண்டு நடைபெற உள்ள இடம் - சேண்டாய் (**Sendai**) ஜப்பான்.
- இந்தியா – நேபாளம் கூட்டு இராணுவ பயிற்சி - சூர்ய கிரண் **VII** கடந்த ஆகஸ்டு 31 ஆம் தேதி பித்டோராகார்க்கில் முடிவடைந்தது. முதல் சூர்ய கிரண் கூட்டு இராணுவ பயிற்சி 2011 ஆம் ஆண்டு மிஷோரம் மாநிலத்தின் வைராங்காடே எனுமிடத்தில் நடைபெற்றது.
- சமீபத்தில் வழிபாட்டுத் தலங்களில் விலங்குகளை பலியிடுவது தடை செய்யப்பட்ட மாநிலம் - ஹிம்மாச்சல் பிரதேசம்.

Unique IAS Academy

- இந்தியாவின் 42 வது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதியரசர் **H.L** தத்து (**H.L. Dattu**) நியமிக்கப்படவுள்ளார். தற்போது தலைமை நீதிபதியாகவுள்ள **R.M.**லோத்தா வரும் 27-09-2014 ல் ஓய்வு பெறுகிறார்.
- நாளந்தா பல்கலைக்கழகம் புத்துயிர் பெற்றது. நகரில் புத்த மத வழிபாட்டு நகரமான பீகாரின் ராஜகிருகாவில் பழமை வாய்ந்த நாளந்தா பல்கலைக் கழகம் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (பழங்கால நாளந்தா பல்கலை இருந்த இடத்திலிருந்து 12 கி.மீ தொலைவில்).

➢ ஜன தன யோஜனா – ஆண்டு 15-2014 -நோக்கம் **Financial inclusion (Bank A/c)**

- இதில் 7.5 கோடி வங்கி கணக்கு தொடங்காத குடும்பங்களை உள் கொண்டுவருவது மற்றும்,
- **NAM-National Ayush mission** (தேசிய சுகாதார திட்டம்)
- **Incredible** இந்தியா என்ற **Application** திட்டத்தை சுற்றுலா துறை தொடங்கியது.**(mobile App to help)**
- இந்தியா-ஆஸ்திரேலியா அணுசக்தி ஒப்பந்தம்.
- **Ex. Avia Indra-** இந்தியா ரஷ்யா விமானப்படை கூட்டுப்பயிற்சி – காஸ்பியன் கடலில் நடைபெற்றது
- **VPBY- Varishtha pension Bima Yojana** பென்ஷன் திட்டம்.
- **INS Sumithra** – கடலோர பாதுகாப்பு கப்பல்.

Unique IAS Academy

- **H.L. Dattu – next chief justice**
- வரலாற்று ஆசிரியர் பிபன் சந்திரா அவர்கள் காலமானார்.
- **Marin cilic of Croatia-** செரினா வில்லியம்ஸ் **U.S open** பட்டம் வென்றார்.

Unique IAS Academy